**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.64/2024 – PW- 9**

| | |
|---|---|
| Name | திரு. தமிழ்செல்வன் |
| Husband/Father Name | சண்முகம் |
| Village /Area | காட்டுப்பாக்கம் |
| Taluk | நெமிலி |
| Occupation | விவசாயம் |
| Age | 62 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 19.11.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த ரங்கநாதன் என்னுடைய தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த செம்டம்பர் – 2021 அன்று எனது தம்பியை கிருஷ்ணன், கிருஷ்ணவேணி, உமேஷ் மற்றும் எதிரிகளின் மற்றொரு மகன் ஆகியோர்கள் நில தகராறு காரணமாக அடித்துவிட்டார்கள் என்று எனக்கு தொலைபேசி மூலமாக தகவல் வந்தது.

கோவிந்தாங்கல் பேருந்து நிறுத்தம் அருகே எதிரிகள் எனது தம்பி ரங்கநாதனை தாக்கியதாக எனக்கு தகவல் வந்தது. பிறகு நான் சென்று பார்த்த போது அவரை வாலாஜா மருத்துவனைக்கு அழைத்து சென்றார்கள். நான் அங்கு சென்று பார்த்தேன் அவர் இறந்து விட்டிருந்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரிகள் தாக்கியதாக எனக்கு தகவல் கிடைக்கவில்லை என்று சொன்னால் தவறு. இறந்தவர் எனது உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.19 13:55:22 +0530

II Additional District and Sessions Judge,

Arakkonam.